தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

முதலாம் ஆண்டு – முதற்பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2016**

**C011** இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. மகாகவி எனப் போற்றப்படுவர் யார்?
2. பாரதியின் பெற்றோர் யாவர்?
3. பாரதியின் புனைப் பெயர் என்ன?
4. பாரதி எழுதிய முப்பெரும் காப்பியங்கள் யாவை?
5. பாரதி உரை எழுதிய நூல் எது?
6. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
7. பாரதி மேனாட்டாருடன் மோத எந்தப் பத்திரிகை அவருக்குத் துணை புரிந்தது?
8. தமிழ்ப் பணி ஆற்ற பாரதி ஏற்படுத்திய அமைப்பின் பெயர் என்ன?
9. பாரதிதாசனின் எந்தப் படைப்பிற்குச் சாகித்திய அகாடமி விருது கிடைத்தது?
10. எவற்றின் மேன்மையினை விளக்க சங்கை முழங்கச் சொல்கிறார் பாரதிதாசனார்?
11. “கடுகு போல் உள்ளம் கொண்டோன்” யார் எனப் பாரதிதாசன் குறிப்பிடுகின்றார்?
12. புரட்சிக் கவிஞர் யார்?
13. பாரதிதாசன் தொடங்கிய இதழின் பெயர் யாது?
14. பாரதிதாசனைத் திரைப்பாடல் எழுத அழைத்தவர் யார்?
15. சுயமரியாதை என்றால் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. குடும்ப விளக்கின் ஒரு நாள் காலைக் காட்சியை விளக்கு.
2. செந்தமிழின் சிறப்புகளாகப் பாரதி போற்றுவன யாவை?
3. 'பெண் கல்வி' குறித்த பாரதிதாசனின் சிந்தனையைப் புலப்படுத்துக.
4. பாரதியின் இதழ்ப் பணி குறித்தெழுதுக.
5. பாரதிதாசனின் நாடகங்கள் யாவை?
6. பாரதியின் வசனக் கவிதை பற்றி விளக்கி வரைக.
7. புரட்சிக் கவிஞர் எனப் பாரதிதாசனைப் போற்றக் காரணங்கள் என்ன?
8. சாதி குறித்துப் பாரதி குழந்தைகளுக்குக் கூறும் அறிவுரை யாது?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் பெண் விடுதலைச் சிந்தனைக் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் சமூகச் சாடல்களை விவரிக்க.

2. (அ) "தமிழ்ப் பற்று மிக்கவர் பாரதிதாசன்" – விளக்குக.

(அல்லது)

(ஆ) "நாட்டுப் பற்றுக் கவிஞர் பாரதி" - பொருத்துக.

3. (அ) பாரதியின் உலகளாவிய சிந்தனையை அவரது கவிதைகள் மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) இயற்கையைப் போற்றுவதில் பாரதிதாசனுக்கு நிகர் பாரதிதாசனே என்பதைத் தெளிவு படுத்துக.

***